# 5 மணி நேரம் மட்டுமே விவசாயத்துக்கு மின் விநியோகம்

First Published : 19 Feb 2011 01:34:26 PM IST

திருச்சி, பிப். 18: விவசாயத்துக்கு 5 மணி நேரம் மட்டுமே மின் விநியோகம் செய்யப்படுகிறது என, திருச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) கா. பேச்சியம்மாள் தலைமை வகித்தார்.

காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு மாநிலத் துணைத் தலைவர் புலியூர் ஏ. நாகராஜன் பேசியது:

"திருச்சி மாவட்டத்தில் புறநகர் பகுதிகளில் விவசாயத்துக்கான மும்முனை மின்சாரம் பகலில் 2 மணி நேரமும், இரவில் 3 மணி நேரமும் என மொத்தம் 5 மணிநேரம் மட்டுமே விநியோகம் செய்யப்படுகிறது. அதுவும் எப்போது மின்சாரம் வருகிறது என்பதே தெரியவில்லை.

இதனால், அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள நெல் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து கருகிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, நாள்தோறும் குறைந்தபட்சம் 6 மணி நேரமாவது மின்சாரம் விநியோகம் செய்ய வேண்டும். அதுவும் எந்த நேரத்தில் விநியோகம் செய்யப்படும் என்பதை முன்னறிவிப்பு செய்ய வேண்டும்' என்றார் நாகராஜன்.

இதே கருத்தை மேலும் சில விவசாயிகள் வலியுறுத்தினர்.

இதையடுத்து, மின் வாரிய அதிகாரி பேசியது:

"வழக்கமாக பகலில் 4 மணி நேரமும், இரவில் 3 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால், கடந்த 2 நாள்களாக மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மின்சாரத் தேவை அதிகரித்திருப்பதே இதற்குக் காரணம். இதனால், மும்முனை மின்சாரம் விநியோகிக்கப்படும் நேரம் குறைந்துள்ளது. இந்த பிரச்னை ஓரிரு நாளில் சீராகிவிடும்' என்றார் அவர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் (இந்திய கம்யூனிஸ்ட் பிரிவு) மாவட்டச் செயலர் அயிலை சிவ. சூரியன் பேசியது:

"கோடைகாலத்தில் மேட்டூர் அணையிலிருந்து 3,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிட வேண்டும். மேலும், நாமக்கல் மாவட்டத்தில் காவிரியில் ராட்சத மோட்டார் பம்ப்செட் மூலம் தண்ணீர் இறைக்கப்படுவதால், திருச்சி மாவட்டத்துக்குக் குறைந்த அளவே தண்ணீர் வருகிறது. ஆனால், கோடைகாலத்தில் ராட்சத மோட்டார் மூலம் தண்ணீர் இறைக்க அனுமதி கிடையாது.

இதனால், உய்யகொண்டான் வாய்க்கால், கட்டளை வாய்க்கால், ராம வாய்த்தலை ஆகிய வாய்க்கால்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. மேலும், ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உள்பட பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்குத் தண்ணீர் தேவைப்படுகிறது. எனவே, ராட்சத மோட்டார் பம்ப்செட்களை பறிமுதல் செய்ய வேண்டும்' என்றார் சூரியன்.

இதற்குப் பொதுப் பணித் துறை அதிகாரி பதிலளித்து பேசியது:

"நாமக்கல் மாவட்டத்தில் காவிரியில் தண்ணீர் உறிஞ்சுவதற்குப் பயன்படுத்தப்படும் ராட்சத மோட்டார் பம்ப்செட்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மின் வாரியத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது' என்றார் அவர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி) மாவட்டச் செயலர் சி. மாசிலாமணி பேசியது:

"மாவட்டத்தில் சம்பா சாகுபடியில் கடுமையான மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து வைத்து, கூடுதல் விலை அளித்து நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். மேலும், மகசூல் இழப்பு காரணமாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பயிர்க் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும்' என்றார் அவர்.

இதற்கு பதிலளித்த மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு), "இதுதொடர்பாக ஒரு வாரத்தில் அறிக்கை தயாரித்து அரசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்றார் அவர்.

**வடுகப்பாளையம் ஊராட்சியில் கால்நடை கிளை மருத்துவமனை திறப்பு**

First Published : 19 Feb 2011 01:08:20 PM IST

அரியலூர், பிப். 18: அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், வடுகப்பாளையம் ஊராட்சியில் கால்நடை கிளை மருத்துவமனையை மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி வியாழக்கிழமை திறந்துவைத்தார்.

அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை வியாழக்கிழமை திறந்துவைத்து, 5 பேருக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவியையும், பள்ளிச் சிறார் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் 10 பேருக்கு கண் கண்ணாடிகளை அணிவித்தும், மாவட்ட ஆட்சியர் மேலும் பேசியது:

அரியலூர் மாவட்டத்தில் 6 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களும், 30 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 3 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக செயல்பட்டு வருகின்றன.

நிகழாண்டில் பொய்யாதநல்லூர், மருதூர், வாணந்திரையான்பட்டினம், ஏலாக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் புதிய சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக 4 சுகாதார நிலையங்கள் அனுமதிக்கப்பட்டு, புதிய கட்டடம் கட்ட ஒவ்வொரு நிலையத்துக்கும் தலா ரூ. 22 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

வட்டார அளவில் ஒரு நடமாடும் மருத்துவக் குழு பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று மருத்துவ உதவிகளை செய்து வருகின்றன.

இவற்றின் மூலம் 16,000 தாய்மார்களும், 84,000 பொதுமக்களும் பயன் பெற்றுள்ளனர். இதேபோல, 108 ஆம்புலன்ஸ் மூலம் 3000 தாய்மார்களும், 10,000 பொதுமக்களும் பயன் பெற்றுள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் 240 வருமுன் காப்போம் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 3350 பேருக்கு ரூ. 8.19 கோடியில் உயர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

நலமான தமிழகம் திட்டத்தின் கீழ் 476 முகாம்கள் நடத்தப்பட்டதில் 4000 பேருக்கு ரத்த அழுத்தம் இருப்பதாகவும், 4400 பேருக்கு நீரிழிவு நோய்கள் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதேபோல, 1600 பேருக்கு ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அவர்கள் மேல் சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்றார் அவர்.

இதைத் தொடர்ந்து, வடுகப்பாளையம் ஊராட்சியில் அரசு கால்நடை கிளை மருத்துவமனையைத் திறந்துவைத்த மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி, கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கத்துக்கான மருந்துகளை வழங்கினார். மேலும், திருமானூர் பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் 20 பேருக்கு கறவை மாடுகள் வாங்குவதற்காக தலா ரூ. 20,000 வீதமும், மளிகைக் கடை வைப்பதற்கு ஒருவருக்கு ரூ. 20,000-க்கான கடனுதவியையும் ஆட்சியர் வழங்கினார்.

இந்த விழாக்களுக்கு அரியலூர் சட்டப்பேரவை உறுப்பினர் பாளை து. அமரமூர்த்தி தலைமை வகித்தார்.

இதில் திருமானூர் ஒன்றியக் குழுத் தலைவர் மா. நடராஜன், துணைத் தலைவர் கென்னடி, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மோகன், ஒன்றியக் குழு உறுப்பினர் காமராஜ், ஊராட்சித் தலைவர்கள் ஏலாக்குறிச்சி ரவிச்சந்திரன், குருவாடி ரவி, வடுகப்பாளையம் ஆறுமுகம், திருமானூர் வட்டார மருத்துவர் செல்வமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தேங்காய்க்கு ரூ. 15,000 கொள்முதல் விலை நிர்ணயிக்கக் கோரிக்கை**

First Published : 19 Feb 2011 01:18:02 PM IST

ஆலங்குடி, பிப். 18: ஒரு டன் உரித்த தேங்காயை ரூ. 15,000 என்ற விலையில் கொள்முதல் செய்ய வேண்டும் என்று தென்னை விவசாயிகள் வலியுறுத்தினர்.

ஆலங்குடி அருகேயுள்ள கீரமங்கலத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு தென்னை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் மாவட்ட அமைப்புக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"தென்னை காப்பீட்டுத் திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தை இணைக்க வேண்டும்.

தென்னை வளர்ச்சி வாரியங்கள், தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை அனைவரும் பயன்பெறும் வகையில் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

தென்னை விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி தென்னை நல வாரிய அடையாள அட்டை கள் வழங்க வேண்டும்' என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்க நிர்வாகி சி. தமிழ்க்குமரன் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். ராஜசேகரன், சங்கத்தின் பொதுச் செயலர் டாக்டர் வே. துரைமாணிக்கம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் சங்கத்தின் கெüரவத் தலைவராக சி. தமிழ்குமரன், தலைவராக சொ. துரை, செயலராக மு. மாதவன், பொருளாளராக பொ. ராஜகோபால் உள்ளிட்டோர் புதிய நிர்வாகிகளாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

**ஒரு வெற்றிலை 1 ரூபாய்**

First Published : 19 Feb 2011 09:20:15 AM IST

திருவள்ளூர், பிப். 18: திருவள்ளூரில் ஒரு வெற்றிலை ஒரு ரூபாய் என விற்கப்படுவதால் திருமண கோஷ்டியினரும், பக்தர்களும், வெற்றிலை பயன்படுத்துவோரும் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த 2, 3 தினங்களாக வெற்றிலையின் விலை இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. பெரும்பாலும் வெற்றிலையை கோயிலுக்குச் செல்லும் பக்தர்களும், தாம்பூலப் பையில் போட்டு கொடுக்க, சீர் வரிசையில் வைக்கவும் திருமண கோஷ்டியினரும் வாங்குவர்.

மார்க்கெட் பகுதியில் வெற்றிலை ஒரு கவுலி, ஒரு கட்டு என்ற அளவில் விற்கப்படுவது வழக்கம். ஒரு கவுலி வெற்றிலையில் 100 எண்ணிக்கை இருக்கும். ஒரு கட்டு வெற்றிலை என்பது 400 இருக்கும்.திருவள்ளூரில் கடந்த வாரம் வரை ஒரு கவுலி வெற்றிலை ரூ. 10-க்கு விற்கப்பட்டது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி ஒரு கவுலி ரூ 40 முதல் 50 வரை விற்கப்படுகிறது.

ரூ. 60-க்கு ஒரு கட்டு விற்கப்பட்ட வெற்றிலை தற்போது ரூ. 160 முதல் 200 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

விலை உயர்வு குறித்து வியாபாரிகளிடம் கேட்டபோது, கோயம்பேடு பகுதிக்கு ஆந்திர மாநிலம் கடப்பா, ராஜம்பேட்டை ஆகிய பகுதிகளில் இருந்து வெற்றிலை கொண்டு வரப்படுகிறது.

கடந்த சில நாளாக வரத்து குறைவாக உள்ளதாலும், முகூர்த்த நேரம் என்பதாலும் வெற்றிலையின் தேவை அதிகளவில் உள்ளதாலும் இந்த அளவுக்கு விலையேற்றம் உள்ளது என்றனர்.

**பயிர் சேதத்துக்கு ரூ. 26 கோடி நிவாரணம்**

First Published : 19 Feb 2011 10:06:27 AM IST

கடலூர், பிப். 18: கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில், கன மழையால் சேதம் அடைந்த பயிர்களுக்கு நிவாரணமாக, விவசாயிகளுக்கு ரூ. 26.08 கோடி வழங்கப்பட்டு இருப்பதாக, மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை நடந்த விவசாயிகள் குறைகேட்கும் கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பதில் அளித்து, ஆட்சியர் பேசியது:

மழையினால் சேதமடைந்த தோட்டக்கலைப் பயிர்கள் அல்லாத விவசாயப் பயிர்களுக்கு மொத்தம் 75,902 விவசாயிகளுக்கு 31,433.95 ஹெக்டேர் பரப்பளவுக்கு, ரூ. 23.82 கோடி நிவாரணம் வழங்கப்பட்டு இருக்கிறது. தோட்டக்கலைப் பயிர்களுக்கு 8,160 விவசாயிகளுக்கு 3,024.25 ஹெக்டேர் பரப்பளவுக்கு ரூ. 2.26 கோடி நிவாரணம் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆக மொத்தம் 84,062 விவசாயிகளுக்கு 34,458.21 ஹெக்டேர் பரப்பளவுக்கு, நிவாரணத் தொகையாக ரூ. 26.08 கோடி வழங்கப்பட்டு உள்ளது.

நெல் விவசாயிகளுக்கு ரூ. 18.49 கோடியும், மக்காச்சோளம் விவசாயிகளுக்கு ரூ. 2.33 கோடியும், பருத்தி விவசாயிகளுக்கு ரூ. 1.88 கோடியும், உளுந்து விவசாயிகளுக்கு ரூ. 74 லட்சமும், நிலக்கடலை விவசாயிகளுக்கு ரூ. 35 லட்சமும், மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளுக்கு ரூ. 1.42 கோடியும், மலர் விவசாயிகளுக்கு ரூ. 12.68 லட்சமும், காய்கறி விவசாயிகளுக்கு ரூ. 32 லட்சமும், வாழை விவசாயிகளுக்கு ரூ. 19.46 லட்சமும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டு இருக்கிறது.

இதில் விடுபட்டவர்கள் தகுந்த ஆவணங்களுடன் விண்ணப்பித்தால் நிவாரணம் வழங்கப்படும் என்றார் ஆட்சியர்.

ஒரிசா இளைஞர் கொலை

கடலூர், பிப்.18: கடலூர் துறைமுகம் சந்திப்பு ரயில் நிலையத்தில் ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் (22) வெள்ளிக்கிழமை கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

ஒரிசா மாநிலம், கோர்த்தா மாவட்டம், சம்பந்தர்பூரைச் சேர்ந்த ராதாமோகன் நாயக்கின் மகன் கிருஷ்ணன். கடலூர் துறைமுகம் ரயில் நிலையத்தில் கட்டுமான வேலைகள் நடந்தபோது, அதில்

கிருஷ்ணன் பணிபுரிந்தார். அப்பணி முடிந்ததும் ரயில் நிலையத்தில் உள்ள கேன்டீனில் 2 மாதங்களாக வேலை செய்து வந்தார்.

இந் நிலையில் கிருஷ்ணன் வெள்ளிக்கிழமை கேன்டீன் அருகே, தலையில் பலத்த காயங்களுடன் இறந்து கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தலையின் பின் பகுதியில் யாரேனும் தாக்கி இருக்கக்கூடும் என்று தெரிகிறது. அருகில் ரத்தம் உறைந்து கிடந்தது. கேன்டீன் வாயிலிலும் ரத்தக்கரை காணப்பட்டது.

சடலத்தை ரயில்வே போலீஸôர் கைப்பற்றி, பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். கிருஷ்ணனுடன் கேன்டீனில் வேலை செய்த 2 பேரைப் பிடித்து வைத்து, போலீஸôர் விசாரணை மேற்கொண்டு உள்ளனர்.

**ஏக்கருக்கு ரூ. 3.50 லட்சம் இழப்பீடு வேண்டும்**

First Published : 19 Feb 2011 01:04:46 PM IST

கரூர், பிப்.18: திருப்பூர் சாயப் பட்டறைக் கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 3.50 லட்சம் இழப்பீடு வேண்டுமென சாயக் கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கரூர், க. பரமத்தி வட்டார நொய்யல் ஆறு மற்றும் வாய்க்கால் பாசன விவசாயிகள் மற்றும் சாயக் கழிவுநீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நொய்யல் குறுக்குச் சாலையில் கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நொய்யல் விவசாயிகள் சங்கத் தலைவர் மா. ராமசாமி தலைமை வகித்தார். தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்க துணைச் செயலர் எம். உதயகுமார், குவைத்ராஜா மக்கள் சமூக இயக்க நிர்வாகிகள் பி. ராதாகிருஷ்ணராஜா, பி. முருகன், டி. தர்மராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தாவரங்கள் மூலம் இயற்கை சாயம் உற்பத்தி செய்வது குறித்து பி. ராமசாமியும், களர் நிலம், கழிவு நீரில் மரம் பயிரிடுதல் குறித்து டி.என்.பி.எல்.நிர்வாகம் சார்பில் பிரசாத், இருதய நோய், சர்க்கரை நோய், ஆஸ்துமா, வலிப்பு நோய்களுக்கு மருந்தில்லா மருத்துவம் குறித்து எஸ். பாலசுப்பிரமணியனும் பேசினர்.

சங்கத் தலைவர் மா. ராமசாமி கூறியது:

திருப்பூர் சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறி நொய்யல் ஆற்றில் கலந்து வரும் கழிவு நீரால் கரூர் மாவட்டம், நொய்யலில் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்பட்டுள்ளது. கழிவு நீர் கலந்த நீரைக் குடித்த மக்களுக்கும் புற்றுநோய் உள்ளிட்ட நோய் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அந்தப் பாதிப்பிலிருந்து விவசாயிகளை மீட்க இந்தக் கருத்தரங்கம் நடைபெற்றது.

நொய்யல் ஆற்றில் தொடர்ந்து கழிவு நீர் வெளியேற்றுவதற்கும், அண்மையில் அரசு சார்பில் சென்னையில் நடைபெற்ற முத்தரப்புப் பேச்சுவார்த்தையில் அரசு அலுவலர்கள், சாயப் பட்டறை உரிமையாளர்கள் மட்டுமே பங்கேற்றனர்.

விவசாயப் பிரநிதிகளை அழைக்காததற்கும் கண்டனம் தெரிவித்துக் கொள்கிறோம். கழிவு நீர் வெளியேற்றம் தொடர்ந்தால் போராட்டம் நடைபெறும். கழிவுநீரால் பாதிக்கப்பட்ட விவசாய விளை நிலங்களுக்கு தற்போது ஏக்கருக்கு ரூ. 650 முதல் ரூ. 14 ஆயிரம் வரை வழங்கப்படுகிறது. இதை ரூ. 3.50 லட்சமாக உயர்த்த வேண்டும் என்றார் அவர்.

**போதிய பணியாளர்கள் இல்லாததால் நெல் கொள்முதல் செய்வதில் பாதிப்பு**

First Published : 19 Feb 2011 01:05:51 PM IST

அரியலூர், பிப். 18: அரியலூர் மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் போதிய பணியாளர்கள் இல்லாததால், விவசாயிகளிடமிருந்து நேரடி கொள்முதல் செய்வதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று விவசாய சங்கப் பிரதிநிதிகளும், விவசாயிகளும் புகார் தெரிவித்தனர்.

அரியலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர் ரெ. பிச்சை தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பல்வேறு விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது கருத்துகளை எடுத்துக் கூறினர்.

தா. பழூர் ஒன்றிய விவசாயச் சங்கத்தின் செயலர் வி. நாகரத்தினம்:

தா. பழூர் ஒன்றியத்தில் 10,000 ஏக்கர் நெல் சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலையில் இந்தப் பகுதியில் போதுமான எண்ணிக்கையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 2 பணியாளர்கள் மட்டும் இருப்பதால், அவர்களால் அதிகளவில் நெல் கொள்முதல் செய்ய முடிவதில்லை. 300 மூட்டைக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்படுவதில்லை. எனவே, விவசாயிகளின் நலன் கருதி தா. பழூர், அடிக்காமலை, இடங்கன்னி, கோடாலிக்கருப்பூர் பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்றார் அவர்.

அகில இந்திய விவசாய சங்கத் தலைவர் பிச்சைபிள்ளை:

அரியலூர் மாவட்டத்தில் தா. பழூர், திருமானூர் பகுதிகளில் போதிய தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் பயிரிட்டுள்ள நெல் பயிர்கள் கருகும் அபாயத்தில் உள்ளது. புள்ளம்பாடி

வாய்க்காலில் விவசாயிகளின் நலன் கருதி தண்ணீர் திறந்துவிடுவதற்குரிய நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்குரிய பணம் பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளதாக பல பகுதிகளிலிருந்து புகார்கள் வருகின்றன.

மழையால் சேதமடைந்த சாலைகளை புனரமைப்பதற்காக ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டதாக மாவட்ட ஆட்சியர் அறிவித்திருந்தார். எத்தனை பகுதிகளில் சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. எவ்வளவு நிதி செலவிடப்பட்டுள்ளது போன்ற விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்றார் அவர்.

அரியலூர் மாவட்ட விவசாய சங்கத் தலைவர் செங்கமுத்து:

அரியலூர் மாவட்டத்தில் போதுமான அளவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளைவிட வியாபாரிகளுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

நெல் கொள்முதல் விலை எவ்வளவு, அரசு அளிக்கும் மானிய உதவிகள் போன்ற விவரங்கள் நெல் கொள்முதல் நிலையங்களில் வைக்கப்படவில்லை. விவசாயிகளுக்கு பகலில் 3 மணி நேரமும், இரவில் 3 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இரவில் எப்போது மும்முனை மின்சாரம் வருகிறது என்பது தெரியவில்லை. இதனால், விவசாயிகள் தங்களது பாசன நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் அவதிப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

விவசாய சங்கத்தைச் சேர்ந்த அம்பேத்கர் வழியன்:

திருவையாறு - திருமானூர் வழியாக அரியலூருக்கும், திட்டக்குடி - அரியலூருக்கும் இடையே கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டும். அரியலூரில் தொடர் பேருந்துகளை இயக்க வேண்டும். புறநகர்ப் பேருந்து நிலையத்தை அரியலூரில் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

விவசாய சங்கத் தலைவர் உலகநாதன்:

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் போதிய பணியாளர்கள் இல்லாததால், பல இடங்களில் நெல் மூட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன. முட்டுவாஞ்சேரியில் 500 மூட்டைகளும், திருபுரந்தானில் 600 நெல் மூட்டைகளும் தேங்கிக் கிடக்கின்றன.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்குரிய பணம் பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளது. இதற்குரிய நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

விவசாயிகளின் கேள்விகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் ரெ. பிச்சை பதிலளித்து பேசியது:

மாவட்டத்தில் எத்தனை நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் எவ்வளவு, விவசாயிகளுக்கு

வழங்கப்பட்ட தொகை எவ்வளவு போன்ற விவரத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் விவசாயிகளிடம் தெரிவிக்க வேண்டும். மாவட்ட நிர்வாகம் வெளிப்படையாக செயல்படுகிறது. இதில் ஒளிவு மறைவு இல்லை என்றார் அவர்.

**வடிகால் வசதியுள்ள நிலங்களில் தென்னை சாகுபடி செய்ய அழைப்பு**

First Published : 19 Feb 2011 01:23:43 PM IST

தஞ்சாவூர், பிப். 18: வடிகால் வசதியுள்ள நிலங்களில் தென்னை சாகுபடி செய்து பயன்பெறலாம் என தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் எம். செல்வராஜ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேங்காய் நமது அன்றாட சமையலில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. உடல் நலத்துக்கு இளநீர் ஒரு அருமருந்தாகும். தென்னையிலிருந்து கிடைக்கும் மட்டை, பாளை ஆகிய அனைத்தும் பயன்படுத்தக்கூடிய பொருளாகும். எனவே, மாவட்டத்தில் வடிகால் வசதியுள்ள நிலங்களில் தென்னை சாகுபடி செய்து பயன்பெறலாம்.

தென்னை நடவு செய்ய 3 அடி ஆழம், 3 அடி அகலம், 3 அடி நீளம் என்கிற அளவில் பள்ளம் தோண்டி அதற்குள் தொழுவுரம், மணல் ஆகியவற்றை சம அளவில் கலந்து ஒரு அடி உயரம் நிரப்ப வேண்டும். கரையான் தாக்காத வகையில், தடுக்க லிண்டேன் தூள் மருந்து ஒரு பள்ளத்துக்கு 250 கிராம் இட வேண்டும். ஒரு ஹெக்டேர் நடவு செய்ய 175 தென்னங்கன்றுகள் தேவை.

நிகழாண்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மருங்குளம், ஆடுதுறை அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நெட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. ஒரு தென்னங்கன்றின் விலை ரூ. 15. தேவைப்படுவோர் மேற்கூறிய இடங்களுக்குச் சென்று தென்னங்கன்றுகளை வாங்கிப் பயன்பெறலாம் என்றார் அவர்.

தினமலர்

## விவசாயிகளுக்கு ரூ.26.8 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது: கலெக்டர் தகவல்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 19,2011,00:52 IST

கடலூர் : மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு 26 கோடியே 8 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என கலெக்டர் சீத்தாராமன் தெரிவித்தார். விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் சீத்தாராமன் தலைமை தாங்கி பேசுகையில், "மழையால் பாதிக்கப்பட்ட நெல், உளுந்து, வேர்க்கடலை, மக்காச்சோளம், கரும்பு, பருத்தி, துவரை, வரகு பயிர்களுக்கு 23 கோடியே 82 லட்சம் ரூபாயும், மரவள்ளி, பூக்கள், காய்கறிகள், மஞ்சள், வெற்றிலை, வாழை உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களுக்கு 2 கோடியே 26 லட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது' என்றார்.
ஆறுமுகம்: கிராமப் புறங்களில் பகலில் மூன்று மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. 4 மணி நேரம் மின் தடை செய்யப்படுகிறது. இதனால் பயிர்கள் கருகும் அபாயம் உள்ளது.
வேங்கடபதி: பகண்டையில் இருந்து மேல்பட்டாம்பாக்கம் வரை பெண்ணையாற்றில் 12 அடி ஆழத்திற்கு மண் எடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் அதே இடத்தில் குவாரி அமைக்கப்பட்டுள்ளது. அதனை மாவட்ட நிர்வாகம் தடுக்க வேண்டும்.
வெங்கடேசன்: கூட்டுறவுத்துறை மூலம் ஐந்து கரும்பு அறுவடை இயந்திரங்கள் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கரும்பு வெட்டும் இயந்திரம் வாங்கினால் அதற்கு கூடுதலாக 15 கூலி ஆட்கள் தேவைப்படும். ஒரே நேரத்தில் கரும்பு வெட்டி, ஏற்ற நவீன கரும்பு அறுவடை இயந்திரங்களை வாங்க வேண்டும்.
ரவீந்திரன்: அணைக்கரை பாலத்தை ஆய்வு செய்த நீர் வள ஆதார மைய அரசு ஆலோசகர் மோகன கிருஷ்ணன் பாலம் இடியும் அபாயம் உள்ளது என தெரிவித்தார். அணைக்கரை பாலம் இடிந்தால் அதன் மூலம் பாசனம் பெறும் ஒன்னரை லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் பாதிக்கும் அபாயம் உள்ளது. பாலத்தில் கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்க வேண்டும். இவ்வாறு விவாதங்கள் நடந்தன.

பால் கொள்முதல் விலை உயர்வில் ஏமாற்றம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 19,2011,01:15 IST

சேலம்: சேலத்தில் நடந்த குறைதீர்க்கும் கூட்டத்தில், பால் விலை உயர்வில் ஏமாற்றம் அடைந்துள்ளதாக, விவசாயிகள் பலர் கருத்து தெரிவித்தனர்.சேலம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் பழனிசாமி தலைமை வகித்தார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் செங்கோட்டுவேல் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டு குறைகளை தெரிவித்தனர்.கூட்டத்தில், மழைகாலத்தில் சேதமான கிணறுகளை சீரமைக்க, பல விவசாயிகளுக்கு இதுவரை நிதியுதவி வழங்கப்படவில்லை, என்று விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.அதற்கு பதிலளித்து, கலெக்டரின் நேர்முக உதவியாளர் செங்கோட்டுவேல் கூறியதாவது:மழை காலங்களில் இடிந்த கிணற்றுக்கு மறு சீரமைப்புக்காக நிதியுதவி வழங்குவதற்கென, தனியாக திட்டம் தீட்டப்படவில்லை.

விவசாயிகளின் நலனுக்காக, மத்திய, மாநில அரசுகள் நிவாரண நிதியை வழங்கி வருகிறது. தகுதியுள்ள விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.குறைதீர் கூட்டத்தில் பல்வேறு பகுதியை சேர்ந்த விவசாயிகள் பல்வேறு குறைகளை தெரிவித்தனர்.பனமரத்துப்பட்டியை சேர்ந்த சண்முகம், தலைவாசல் கோவிந்தசாமி, சுந்தரம் ஆகியோர் கூறியதாவது:தோட்டக்கலை விவசாயிகளுக்கு, தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியங்கள் சரிவர கிடைப்பதில்லை. பனமரத்துப்பட்டியில் ஒரு சில விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட "செக்'கும் பணம் இல்லாமல் திரும்பிவிட்டது.

இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.சேலத்தில் செயல்படும் சேகோ தொழிற்சாலை, வடநாட்டை சேர்ந்த, 50 பேரின் பிடியில் உள்ளது. அதனால் விவசாயிகள் பலரும் பாதிப்படைந்து வருகின்றனர். மரவள்ளிக்கான விலை உயர்வுக்கும், விவசாயிகளின் பாதிப்புக்கும் அவர்களே காரணம். எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது, அறுவடை காலம் என்பதால், நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், எந்த இடத்திலும் கொள்முதல் மையங்கள் திறப்பதற்கான ஆயத்த பணிகள் கூட நடக்கவில்லை.பல்வேறு போராட்டத்துக்கு பின், அரசு பால் கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளது. விவாயிகள் எதிர்பார்த்த விலையை விட, குறைத்துத் தான், கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளது. அதனால், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**200 விவசாய குழு அமைக்க இலக்கு நபார்டு முதன்மை மேலாளர் தகவல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 19,2011,00:19 IST

ப.வேலூர்: "ப.வேலூர் பகுதியில், 200 விவசாய குழுக்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது' என, நபார்டு வங்கி முதன்மை பொது மேலாளர் நாராயணன் தெரிவித்துள்ளார். நபார்டு வங்கி சார்பில், கூட்டுப் பொறுப்புக்குழுக்களை உருவாக்கவும், கடனுதவி அளிப்பது தொடர்பான கருத்தரங்கு ப.வேலூரில் நடந்தது. உதவி பொதுமேலாளர் பூவராகவன் வரவேற்றார். கூட்டுறவு வங்கி இணை பதிவாளர் சீனிவாசன், இந்தியன் வங்கி துணைப்பொது மேலாளர் ஆன்பின் டேவிட், நாமக்கல் முன்னோடி வங்கி மேலாளர் அறிவழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நபார்டு வங்கி முதன்மை பொது மேலாளர் நாராயணன் கருத்தரங்கை துவக்கி வைத்து பேசியதாவது: ப.வேலூர், கபிலர்மலை மற்றும் மோகனூர் ஆகிய யூனியன்களில் உள்ள சிறு குழுக்களுக்கு கடன் வங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் வாழை, கரும்பு, வெற்றிலை கொடிக்கால் மற்றும் கோரை ஆகியவை பிரதான பயிர்களாக சாகுபடி செய்யப்பட்டு வரப்படுகிறது. இத்தொழிலில், சொந்த நிலம் இல்லாதவர்களும் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறு நிலம் இல்லாத விவசாயிகள் நான்கு பேர் முதல் 10 பேர் வரை, ஒரு குழுக்களாக அமைத்து அவர்களுக்கு ஏழு சதவீதம் வட்டியுடன், நபர் ஒருவருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் கடன் வழங்கப்படும். அதன்படி, 200 குழுக்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் விவசாயிகள் வாழ்வாதாரம் உயர்வதுடன், வங்கியின் தரமும் உயரும். பல தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வழங்க நபார்டு வங்கி முன் வந்துள்ளது. அதை விவசாயிகள் பயன்படுத்திக்கொண்டு, தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில், ரத்தினசபாபதி சுற்றுச்சூழல் கிராம மேம்பாட்டு நிறுவன செயலாளர் தில்லை சிவக்குமார், கூட்டுறவு வங்கி செயலாளர்கள், மேலாளர்கள், விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுவினர் உள்பட பலர் பங்கேற்றனர்.

**குறைந்தது பருப்பு, எண்ணெய் விலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 19,2011,21:08 IST

விருதுநகர் : விருதுநகர் மார்க்கெட்டில் பருப்பு, பயறு விலை மூடைக்கு சூ100 முதல் 400 வரை குறைந்துள்ளது. பாமாயில் சூ10, கடலை எண்ணெய் சூ20, சர்க்கரை மூடைக்கு சூ20 குறைந்துள்ளது. மார்க்கெட் மந்தநிலையால் விற்பனை குறைவாகவே உள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர். விருதுநகரில் சர்க்கரை விலை மூடைக்கு சூ2,925லிருந்து சூ2,905 ஆக

குறைந்துள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1,180 லிருந்து 1,160 ஆகவும், சூரியகாந்தி எண்ணெய் 730 ஆகவும், பாமாயில் ஆயிரத்திலிருந்து சூ990 ஆக குறைந்துள்ளது. எண்ணெய் மார்க்கெட்டில் மந்தநிலை நிலவுவதால் விலை குறைந்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர். நிலக்கடலைப் பருப்பு சூ3,600, கடலைப்புண்ணாக்கு சூ 2,500 ஆக உள்ளது. நயம் உளுந்து விலை மூடைக்கு சூ4,600லிருந்து 4,500 வரையும், சுமார் ரகம் சூ4,000லிருந்து 4,100 வரையும், பர்மா பருவட்டு சூ4,600லிருந்து 4,700 ஆகவும் உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு சூ6,000லிருந்து 6,100 ஆகவும், பர்மா பருவட்டு சூ5,500 லிருந்து 5,600 ஆகவும் உள்ளது. நயம் துவரை சூ4,400லிருந்து 4,200 ஆகவும், பொடி துவரை சூ3,700லிருந்து 3,400 ஆகவும், துவரம் பருப்பு சூ6,200லிருந்து 6,000 ஆகவும், பொடி துவரம் பருப்புசூ 5,500லிருந்து 5,200 ஆகவும் குறைந்து உள்ளது.

பாசிப்பயறு சூ4,400லிருந்து 4,300 ஆகவும், லயன் பருவட்டு சூ4,900 ஆகவும், சுமார் ரகம் சூ3,700 ஆகவும் உள்ளது. பாசிப்பருப்பு சூ6,300லிருந்து 6,200 ஆகவும், சுமார் ரகம் சூ5,600லிருந்து 5,500 ஆகவும் குறைந்துள்ளது. பருப்பு மார்க்கெட்டில் விற்பனை சூடு பிடிக்காததால், விலை குறைந்துள்ளது. மைதா மூடைக்கு சூ2,180, கொண்டைக்கடலை சூ2,700, பொரிகடலை சூ2,100 ஆக உள்ளது. பழைய சம்பா மிளகாய் வத்தல் விலை, குவிண்டாலுக்கு சூ3,500 லிருந்து 4,000 வரையும் சங்கரன்கோவில் பழைய வத்தல் சூ6,000லிருந்து 6,500 வரையும், முண்டு வத்தல் சூ5,000லிருந்து 5,500 ஆகவும் உள்ளது. புது சோடை வத்தல் சூ3,500 ஆகவும், பழைய சோடை வத்தல் சூ 2,500 ஆகவும் உள்ளது. புது வத்தல் வரத்தால் குவிண்டாலுக்கு சூ8,000 லிருந்து 9,000 ஆக உள்ளது.

## வனப்பொருட்கள் சேகரிக்கும் உரிமையை பறிக்கும் வனத்துறை

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 19,2011,00:12 IST

டி.என்.பாளையம்: வனப்பொருட்கள் சேகரிக்கும் உரிமையை மலைவாழ் மக்களிடம் இருந்து பறித்து, ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க வனத்துறை முடிவு செய்துள்ளது.மலை வாழ் மக்கள், இயற்கையாக மலையில் கிடைக்கும், தேன், கடுக்காய், நெல்லிக்காய், சுண்டைக்காய், புளி, புங்கன், வேம்பு, சீமார் புல், பட்டை, சாம்பிராணி ஆகியவற்றை சேகரித்து, தனியார் வியாபாரிகளிடம் வழங்குவர். அவர்கள் தரும் சொற்பத் தொகையை மட்டுமே பெற்று வாழ்க்கையை ஓட்டி வந்தனர். இக்குறையைப் போக்கும் வகையில், தமிழக அரசு 2003ல் புதிய அரசாணை வெளியிட்டது. அதன்படி, மலை கிராமங்களில் கிராம வனக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களே வனப்பொருட்களை சேகரித்து, சந்தைக்கு கொண்டு வந்து, நேரடியாக ஏலம் விட்டு, அதன்மூலம் கிடைக்கும் பணப்பலனை மக்களே அனுபவிக்கும் வகையில் உரிமம் வழங்கப்பட்டது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வனக்கோட்டத்தில் 28 கிராம

வனக்குழுக்கள் அமைக்கப்பட்டன. கிராம வனக்குழுக்களிடம் உள்ள வனப்பொருட்கள் சேகரிக்கும் உரிமத்தை பறித்து, ஒப்பந்ததாரர்களிடம் வழங்க, திடீரென வனத்துறை முடிவு செய்துள்ளது. இதைக் கண்டித்து, சத்தி அருகே திம்பத்தில் வனக்குழு தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நடந்தது. வனப்பொருட்கள் சேகரிக்கும் உரிமையை மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கும் போர்வையில், தனியார் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கும் முடிவை கண்டித்தல். ஒப்பந்ததாரர்களுடன், இதுதொடர்பாக ஒப்பந்தம் செய்திருந்தால் அதை ரத்து செய்ய கோருதல். இக்கோரிக்கையை வலியுறுத்தி சத்தி தாலுகா அலுவலகம் முன், வரும் 21ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்துதல் என தீர்மானிக்கப்பட்டது. ஒசப்பாளையம் வனக்குழு தலைவர் மாதன் தலைமை வகித்தார். கெத்தேசால், உகிளியம், ஒசூர், நகலூர், மாவநத்தம், குளியாடம், சென்டர் தொட்டி, காளிதிம்பம் பகுதி வனக்குழு தலைவர்கள், பழங்குடி மக்கள் சங்கத் தலைவர் ராமசாமி, மாவட்ட அமைப்பாளர் மோகன் குமார், ஜீவபாரதி மற்றும பலர் பங்கேற்றனர். ராமரணை வனக்குழு தலைவர் ராமன் நன்றி கூறினார்.

**பாசன விவசாயிகள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,22:30 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அடுத்த சோழனூரில் நடந்த பாசன விவசாயிகள் கூட்டத்தில், பண்ணை உபகரணங்கள் செயல்பாடு மற்றும் மானிய திட்டங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.பொள்ளாச்சி அடுத்த சோழனூரில் பாசன விவசாயிகள் கூட்டம் நடந்தது. சோழனூர் கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் பாலசந்திரன் முன்னிலை வகித்தார். உதவிபொறியாளர்கள் விஸ்வநாதன், ராமசாமி ஆகியோர் நவீன வேளாண் உபகரணங்களின் செயல்பாடுகள் குறித்தும், மானிய திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர். கிணத்துக்கடவு வேளாண்மை அலுவலர் கணேசமூர்த்தி, விவசாயிகளுக்கு அடையாள அட்டை பற்றியும், அரசு வழங்கும் மானிய விதைகள் மற்றும் பிற திட்டங்கள் பற்றியும் பேசினார். விவசாயிகள் பண்ணைக்கருவிகள் மற்றும் சொட்டு நீர் பாசனம் சம்பந்தமான சந்தேகங் களுக்கு விளக்கம் பெற்றனர்.

விளை பொருட்கள் ஏற்றுமதி அதிகரித்தால்மட்டுமே விவசாயிகள் வலுவடையலாம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,23:11 IST

காந்திகிராமம்:விவசாய விளை பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்க செய்வதன் மூலம் பொருளாதார ரீதியாக விவசாயிகளை வலுவடைய செய்ய முடியும். கடன்பட்டு தற்கொலை செய்து கொள்ளும் அவல நிலையில் இருந்து அவர்களை காப்பாற்ற முடியும் என புதுச்சேரி மத்திய பல்கலை., இணை-துணை வேந்தர் ராமதாஸ் காந்திகிராமத்தில் பேசினார்.காந்திகிராம பல்கலை.,யில் உலகமயமாக்கல் மற்றும் இந்திய விவசாயம் குறித்த கருத்தரங்கம் நடந்தது. துணைவேந்தர் ராமசாமி தலைமை வகித்தார். கருத்தரங்கு இயக்குநர் நேரு வரவேற்றார்.கருத்தரங்கை துவக்கி வைத்து, புதுச்சேரி மத்திய பல்கலை., இணை- துணைவேந்தர் ராமதாஸ் பேசும்போது," கடுமையான பொருளாதார நெருக்கடியாலும், நாட்டின் கவுரவத்தை பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தாலும் உலகமயமாக்கல் கொள்கையை இந்திய அரசு அமலாக்கியது.

இதற்காக உலக வங்கி மற்றும் சில நிதியமைப்புகளின் நிபந்தனை அனைத்தையும் ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. உலகமயமாக்கலினால் நாட்டின் பொருளாதாரம், உற்பத்தி, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு நிலைகளிலும் நேர்மறையான மற்றும் எதிர்மறையான விளைவுகள் நிகழ்ந்தன. இதில் விவசாயம் கடுமையான பாதிப்பிற்குள்ளானது. உள்நாட்டு தேவைக்கான உணவு பொருள் உற்பத்தியில் மட்டுமே ஈடுபட்டதால், விவசாயிகள் லாபம் பெறமுடியாமல் நஷ்டமடைந்து கடன்பட்டனர்.

இதனால், தற்கொலை முடிவிற்கு தள்ளப்பட்டனர். கடந்த சில ஆண்டுகளில் 2 லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர்.விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். உள்நாட்டு தேவைக்கான பயிர்களை மட்டுமே அனைத்து தரப்பு விவசாயிகளும் உற்பத்தி செய்வது தவிர்க்கப்பட வேண்டும். வெளிநாடுகளின் தேவை யை உணர்ந்து பணப்பயிர்கள் உற்பத்தி அதிகரிப்பட வேண்டும். விவசாயிகளின் வாழ்க்கைத்தரம். பொருளாதாரம் உயர்ந்தால் மட்டுமே விவசாயம் வளர்ச்சியடையும்' என்றார். விழாவில் அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் சீனிவாச கவுடா, பேராசிரியர்கள் பழனித்துரை, வில்லியம் பாஸ்கரன் உட்பட பலர் பங்கேற்றனர். பொருளாதார துறை பேராசிரியர் ராமசாமி நன்றி கூறினார்.

**விவசாயிகள்ஸ்ரீவி.,யில் அறுவடை நேரத்தில் நெல் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,22:46 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூரில் தொடர்ந்து நெல் விலை வீழ்ச்சியடைந்து வருவதால் விவசாயிகள் கடனுக்கு விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம், வத்திராயிருப்பு பகுதிகளில் அறுவடை நடந்து வருகிறது. கடந்த டிசம்பர் முன் டீலக்ஸ் பொன்னி ஒரு மூடை(72 கிலோ) 800 ரூபாய் வரை கிடைத்தது. கேரளாவிற்கு அதிகளவில் ஏற்றுமதியாகும் பால் ஒட்டு ரக நெல்லுக்கு 930 ரூபாய் வரை கிடைத்தது. அறுவடை நடந்து வரும் நிலையில் டீலக்ஸ் பொன்னி மூடைக்கு 650 ரூபாயும், பால் ஒட்டு ரக நெல்லுக்கு 650 ரூபாயுமே கிடைத்து வருகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.விலை குறைந்து வருவதால் வாங்குவதற்கு வியாபாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் விவசாயிகள், நெல்லை கிடைத்த விலைக்கு விற்கின்றனர். சில வியாபாரிகள் விவசாயிகளிடம் நெல்லை கடனுக்கு வாங்கி செல்கின்றனர். விவசாயிகளும் வைத்திருந்தால் மேலும் விலை குறைந்து விடுமோ என்ற பயத்தில் கடனுக்கு கொடுத்து வருகின்றனர்.

விவசாயி சுப்பையா கூறியதாவது: அரசு கொள்முதல் நிலையங்களில் ஈரப்பதம் போன்ற காரணங்களை காட்டி விலை குறைப்பு செய்கின்றனர். இதனால் வியாபாரிகளிடம் செல்லும் நிலை ஏற்படுகிறது. அவர்களும் இதை பயன்படுத்தி கொண்டு விலையை கடுமையாக குறைப்பதோடு கடனுக்கு வாங்கி செல்கின்றனர். அந்த பணத்தை வாங்க மாதக்கணக்கில் அலைய வேண்டிய நிலை ஏற்படுகிறது, என்றார்.

**செம்மை கரும்புசாகுபடி கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,22:37 IST

சேத்தூர்:சேத்தூர் அருகே தேவதானத்தில் செம்மை கரும்பு சாகுபடி, சொட்டு நீர்பாசனம் பற்றிய செயல் விளக்கம் துணை மேலாளர் (கரும்பு) ஜாஹீர் உசேன் தலைமையில் நடந்தது.ஜெயின் இரிகேசன் முதுநிலை மேலாளர் ஸ்டாலின் சொட்டு நீர் பாசனம் பற்றி விளக்கினார். கரும்பு அலுவலர் சண்முக குத்தாலிங்கம் நன்றி கூறினார். ஏற்பாட்டை தரணி சர்க்கரை ஆலை பணியாளர்கள்,ஜெயின் சொட்டு நீர் பாசன ஊழியர்கள் செய்திருந்தனர்.

தினத் தந்தி

## வெளிநாடுகளில் விலை உயர்ந்து வருவதால் ரப்பர் இறக்குமதி செய்வதில் டயர் நிறுவனங்களுக்கு சிக்கல்



*எஸ் சனந்தகுமார்*

*கொச்சி*

*இந்தியாவுடன் ஒப்பிடும்போது வெளிநாடுகளில் இயற்கை ரப்பர் விலை மிகவும் அதிகமாக உள்ளது. எனவே, இந்திய டயர் நிறுவனங்களால், இயற்கை ரப்பரை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.*

*சர்வதேச சந்தை*

*இவ்வாண்டு ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில், சர்வதேச சந்தைகளில் ஒரு கிலோ இயற்கை ரப்பர் விலை ரூ.226.39–ஆக இருந்தது. இது, சென்ற வியாழக்கிழமை அன்று 29 சதவீதம் அதிகரித்து ரூ.291.14–ஆக உயர்ந்துள்ளது. அதேசமயம், இதே காலத்தில் உள்நாட்டில் விலை 16 சதவீதம் உயர்ந்து ரூ.240–ஆக அதிகரித்துள்ளது. ஆக, உள்நாட்டைக் காட்டிலும் வெளிநாட்டில் ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.51 அதிகமாக உள்ளது.*

*இயற்கை ரப்பர் அதிக அளவில் உற்பத்தியாகும் தாய்லாந்து, இந்தோனேஷியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் பருவநிலை கோளாறுகளால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், சர்வதேச அளவில் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.*

கார்கள் உற்பத்தி

இந்நிலையில், உள்நாட்டிலுள்ள டயர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இயற்கை ரப்பர் அதிக அளவில் தேவைப்படுகிறது. ஏனென்றால், நடப்பு 2011–ஆம் ஆண்டில், சென்ற ஆண்டைக் காட்டிலும் கார்கள் உற்பத்தி 25 சதவீதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கார்கள் விற்பனையில் ஏற்பட்டுள்ள எழுச்சியே இதற்கு காரணமாகும். உள்நாட்டில் டயர்களுக்கான தேவைப்பாடு அதிகரித்து வருவதையடுத்து, டயர் நிறுவனங்கள் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

7.5 சதவீத வரி

இதனையடுத்து, இயற்கை ரப்பர் இறக்குமதி மீதான தீர்வையை ரத்து செய்யும்படி நிறுவனங்கள் சென்ற 2010–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தன என்று மோட்டார் வாகன டயர் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் பொது இயக்குனர் ராஜிவ் புத்தராஜா தெரிவித்தார்.

மத்திய அரசு இது குறித்து இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் முடிவு எடுத்தது. தற்போதுள்ள நிலையில், டயர் தயாரிப்பு நிறுவனங்களுக்கு 40,000 டன் இயற்கை ரப்பரை குறைக்கப்பட்ட வரியான 7.5 சதவீத தீர்வையில் இறக்குமதி செய்ய அனுமதி உள்ளது. தற்போது வெளிநாடுகளில் இயற்கை ரப்பர் விலை மிகவும் உயர்வாக உள்ளது. இந்நிலையில், இறக்குமதி செய்வதால் டயர் தயாரிப்பு நிறுவனங்களின் செயல்பாட்டு செலவினம் மிகவும் அதிகரிக்கும் என்று வர்த்தக நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

மத்திய அரசு, இயற்கை ரப்பர் மீதான தீர்வையை முன்பே குறைத்து இருக்க வேண்டும். அவ்வாறு செய்து இருந்தால், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் என்பதற்கு ஏற்ப, சர்வதேச சந்தைகளில் விலை குறைவாக இருந்தபோது, அந்த வாய்ப்பை பயன்படுத்தி இயற்கை ரப்பரை இறக்குமதி செய்து இருக்கலாம். இப்போது அந்த வாய்ப்பு கைநழுவி போய்விட்டது என்ற வர்த்தக பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

உற்பத்தி

இந்நிலையில், உள்நாட்டில் இயற்கை ரப்பர் உற்பத்தி ஓரளவிற்கு அதிகரித்து வருகிறது என்று ஜியோஜித் காம்டிரேடு நிறுவனத்தின் தலைமை ஆய்வாளர் ஆனந்த் ஜேம்ஸ் தெரிவித்துள்ளார்.

சென்ற ஜனவரி மாதத்தில், இயற்கை ரப்பர் உற்பத்தி 95,000–1,00,000 டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக, ஒவ்வொரு ஆண்டிலும் பிப்ரவரி மாதத்தில் இதன் உற்பத்தி 45,000–50,000 டன்னாக குறையும். அதேசமயம், சாதகமான பருவநிலையால், ரப்பர் பால் எடுக்கும் காலம் அதிகரித்துள்ளதால், இவ்வாண்டில்

*ரப்பர் உற்பத்தி நன்றாக இருக்கும் என்றும் உள்நாட்டில், அளிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் ஜேம்ஸ் மேலும் கூறினார்.*

*முதல் 7 மாதங்களில்...*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில், நம் நாட்டில் இயற்கை ரப்பர் உற்பத்தி 4,57,650 டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் 4,37,400 டன்னாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது உற்பத்தி 4.6 சதவீதம் அதிகரித்துள்ளது. உள்நாட்டில் அளிப்பு போதுமான அளவில் இருப்பதால், சர்வதேச சந்தைக்கு நிகராக உள்நாட்டில் இயற்கை ரப்பர் விலை அதிகரிக்கவில்லை என்று ஜேம்ஸ் தெரிவித்தார்.*

## ***நடப்பு பருவத்தில் மக்காச்சோளம் ஏற்றுமதி 25 லட்சம் டன்னை எட்டும்***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு சந்தைப்படுத்துதல் பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) நாட்டின் மக்காச்சோளம் ஏற்றுமதி 25 லட்சம் டன்னாக உயரும் என அமெரிக்க தானிய கவுன்சில் தெரிவித்துள்ளது. உள்நாட்டில் உற்பத்தி அதிகரித்து வருவதாலும், வெளிநாடுகளில் நல்ல விலை கிடைப்பதாலும் மக்காச்சோளம் ஏற்றுமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. சென்ற பருவத்தில் ஏற்றுமதி 7 லட்சம் டன்னாக இருந்தது.*

*நடப்பு பருவத்தில் மக்காச்சோளம் உற்பத்தி 2 கோடி டன்னை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயம் தேவைப்பாடு 1.80 கோடி டன் என்ற அளவில்தான் இருக்கும். இதுவும் ஏற்றுமதிக்கு வலுச் சேர்க்கும் அம்சமாகும். மக்காச்சோளம் கோழிகளுக்கு பிரதான தீவனமாக கோழிப்பண்ணைகளில் பயன்படுத்தப்படுகிறது.*